[5] இளம்பிறை, *நீ எழுத மறுக்கும் எனதழகு*, ப. 51
[6] *திருகுர்ஆன்* (30: 21)
[7] *திருகுர்ஆன்* (27: 18)
[8] *திருகுர்ஆன்* (25: 11)
[9] *திருகுர்ஆன்* (16: 13)

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

[10] *தமிழ் இலக்கிய வரலாறு*, மதுசாவிமலானந்தம், ப. 23

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

Youth in Tamil Christian Dramas

Dr. J. Mary, Assistant Professor of Tamil,
Jayaraj Annapackiam College for Women, Periyakulam, Theni, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0003-4819-2179

Abstract

Adolescence is not a stage of life marked by changes in age. It is a period of energy, dreams and the power to create change. It is a time filled with enthusiasm, courage and innovative thinking. Young people are the ones who possess this energy. Young people have the ability to face any situation and create new paths. Building friendships by crossing social boundaries, promoting humanity beyond caste and religious differences and standing firmly by their principles are some of the special qualities of today's youth. Their independent thinking is reflected in their ability to choose their own life partners and in their efforts to create an equal society through inter-caste and inter-religious marriages. Their courage to question, their ability to bring about change and their self-confidence to turn their dreams into reality make young people the architects of tomorrow's society. When the energy of young people is guided in a constructive direction, it becomes possible to build a better society and a strong nation.

Keywords: Energy, Dreams, Courage, Innovation, Equality, Humanity, Change, Self-confidence.

References

[1] Aseervatham Adigalar, V. *Vizhippin Vazhi*. Punitha Paraloga Matha Kovil, 1986.
[2] Iraniyal Kalaithozhan. *Oru Kal Kaniyagirathu*. Asisi Achagam, 1996.
[3] John Baptist, A. *Samuga Nokkil Viviliyam*. Vaigarai Pathippagam, 2010.
[4] Jayasankar, R. "Vallalar Paarvaiyil Manithaneyam." *Tamilmozhi Matrum Ilakkiya Pannattu Aayvithazh*, vol. 5, no. 2, Jan. 2023, p. 117. https://doi.org/10.5281/zenodo.7591477.
[5] Karuppasami, Ko. Ka. *Namachivayarin Nadagangal Oru Aaivu*. Thi. Ka. Pathippagam, 1990.
[6] Parimelazhagar. *Thirukkural: Parimelazhagar Urai*. Manivachagar Pathippagam, 2017.
[7] Boothaloor Muthu. *Mezhuguvathigal*. Annai Teresa Pathippagam, 2001.
[8] Siyamila, Ma. "Oodagangalil Tamil Panpaadu." *Tamilmozhi Matrum Ilakkiya Pannattu Aayvithazh*, vol. 2, no. 1, July 2019, p. 104.
[9] Somale. *Tamilnattu Makkalin Marabum Panpadum*. National Book Trust, India, 1981.
[10] Joseph Beschi, A., editor. *Nalloor Kurusu Anthonimuthu Iyatriya Punitha Kanugonthammal Keerthanai Nadagam*. Kiristhava Aayvu Maiyam, Thooya Valanar Kalloori (Thannatchi), 2012.
[11] Gnanaprakasam, Helen. *Karai Thattiya Padagu*. Ulaga Tamil Kalvi Iyakkam, 1988.
[12] Muthuschanmugam, Periya Karuppan Rama, editor. *Nadagakkalaiyin Varalaru*. Madurai Palkalaikazhagam, 1975.
[13] Manivalan, C., editor. *Oodharipillai Vilasam*. Kiristhava Aayvu Maiyam, Thooya Valanar Kalloori (Thannatchi), 1993.

Author Contribution Statement: NIL.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

தமிழ்க் கிறித்தவ நாடகங்களில் இளைஞர்கள்

முனைவர் சே.மேரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம், தேனி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0003-4819-2179

ஆய்வுச் சுருக்கம்

இளமைப்பருவம் என்பது வயதின் மாற்றத்தால் ஏற்படும் பருவ மாற்றம் மட்டமல்ல. அது ஆற்றலின் பருவம், கனவுகளின் பருவம், மாற்றத்தை உருவாக்கும் பருவம். துடிப்பும் துணிவும் புதுமையான சிந்தனையும் கொண்ட ஆற்றலின் ஊற்று. இவ்வாற்றலை உடையவர்கள் தான் இளைஞர்கள். எந்தச் சூழலையும் எதிர்கொண்டு புதிய பாதைகளை உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்கள். எல்லைகளைக் கடந்து நட்பை வளர்ப்பதும், சாதி, மத வேறுபாடுகளைத் தாண்டி மனிதநேயத்தை முன்னிறுத்துவதும், தங்கள் கொள்கைகளில் உறுதியாக நிற்பதும் இன்றைய இளைஞர்களின் தனிச்சிறப்பாகும். தங்களது வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் சுயசிந்தனையும், கலப்புத் திருமணங்கள் மூலம் சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் முயற்சியும் அவர்களின் புதிய சிந்தனையின் வெளிப்பாடுகளாகும். கேள்வி கேட்கும் துணிவும், மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றலும், கனவுகளை நனவாக்கும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர்களே நாளைய சமுதாயத்தின் சிற்பிகள். அவர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமான பாதையில் வழிநடத்தும்போது, ஒரு புதிய சமூகத்தையும் வலிமையான தேசத்தையும் உருவாக்க முடியும்.

குறிப்புச் சொற்கள்: இளமைப்பருவம், ஆற்றல், கனவுகள், துடிப்பு, துணிவு, புதுமையான, சிந்தனை, இளைஞர்கள், சுயசிந்தனை, மனிதநேயம், சமத்துவம்.

முன்னுரை

வாழ்க்கையில் மனிதர்கள், கண்டு சுவைக்கவும், கேட்டு மகிழவும், உணர்ந்து உற்சாகம் பெறவும், சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்கவும், எழுச்சியூட்டும் இலக்கியமாக இருப்பது நாடக இலக்கியம் ஆகும். அவற்றுள் சமுதாயத்தின்மீது கொண்ட அக்கறையால், சமுதாய நலனுக்காகப் படைக்கப்பட்டவை விழிப்புணர்வு நாடகங்கள் ஆகும். அவை சமுதாயச் சூழலை நோக்கவும் அவை தொடர்பாக ஆழ்ந்து சிந்திக்கவும், துணிந்து விமரிசிக்கவும் தொலைநோக்குச் சிந்தனைகளை வழங்குகிறது. இதனால் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற உறுதியை வழங்குகிறது. இதற்குச் சிறந்த கருவியாக இருப்பவர்கள் இளைஞர்கள். இளைஞர்கள.; இவர்கள் சிறப்புமிக்க சக்திகளைக் கொண்டவர்கள் என்பது குறித்து தமிழக்; கிறித்;தவ நாடகங்களில் எடுத்தியம்பப்பட்டுள்ளன. அவற்றுள்

1. விழிப்பின் வழி
2. ஒரு கல் கனியாகிறது
3. மெழுகுவத்திகள்
4. கரை தட்டிய படகு
5. புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம்
6. ஊதாரிப்பிள்ளை விலாசம்

போன்ற நாடகங்களில் இளைஞர்களின் ஆற்றலை மையப்படுத்தப்பட்டுள்ளன. இவை இக்கால இளைஞர்களுக்கு உந்து சக்தியாக இருப்பதை அறிய முடிகிறது.

சமுதாய அக்கறை கொண்ட புதிய தலைமுறை

சமுதாயம் ஒரு குழந்தை. அக்குழந்தைக்கு உள்ள நோயே, நாட்டில் புரையோடிக் கிடக்கும் குற்றங்களும் குறைகளும் ஏற்றத்தாழ்வுகளும் சிக்கல்களும் ஆகும். அந்நோய்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

தீர்க்கும் மருந்தாகப் பயன் தருவன இலக்கியங்களாகும் (கா.நமச்சிவாயரின் நாடகங்கள் - ஓர் ஆய்வு, ப.34)

என்று சமுதாயம் குறித்து கோ. கருப்பசாமி குறிப்பிடுகிறார். கிறித்தவ நாடக இலக்கியங்களில் இளைஞர்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

இன்றைய சமுதாயத்திற்கு சகோதரத்துவமே உடனடித் தேவையாகும். உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கடுத்திருப்பவர்மீதும் அன்புகூர்வாயாக என்ற உயரிய சிந்தனை மக்களிடம் வளர வேண்டும். இதனைச் செயல்படுத்தும் மாபெரும் ஆற்றல்களாக இருப்பவர்கள் இளைஞர்கள். இவர்கள் தான் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற ஆழமான நம்பிக்கையைத் தமிழ்க் கிறித்தவ விழிப்புணர்வு நாடகங்கள் இளைஞர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

ஒவ்வொரு விதைக்குள்ளும் ஒரு மரமும் அதன் கிளைகளும் தளிர்களும் இலைகளும் மொட்டுக்களும் காய்களும் கனிகளும் புதைந்து கிடைக்கின்றன. அதுபோல ஒவ்வொரு படைப்பிற்குள்ளும் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகள், எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவற்றை புதைத்து படைப்பாளன் படைக்கின்றான். (மா. சியாமிளா, ப.104)

ஒவ்வொரு நாடகங்களிலும் வெவ்வேறு வகையான சமுதாயச் சிக்கல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அச்சிக்கல்களுக்குத் தீர்வு காண முன்னெடுத்துச் செல்பவர்கள் இளைஞர்கள் என்பது இதன்வழி உணரமுடிகிறது. எனவே, சமுதாய மாற்றத்தை,

கொள்கை நிறைந்த இளைஞர்கள்
எல்லை கடந்த நட்பு
கலப்புத் திருமணம்
மாற்றத்திற்கான ஆணிவேர் இளையோர்

ஆகிய நிலையில் தான் செயல்படுத்த முடியும் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

கொள்கை நிறைந்த இளைஞர்கள்

தான் அடைய விரும்பும் குறிக்கோளில் உறுதியாக இருந்து அதை எட்டுவதில் கவனத்தைக் குவித்துக் கண் துஞ்சாது, பசி அறியாது செயல்படுபவர்கள் சிறந்த கொள்கையாளர்கள். கொள்கை என்பது பற்றி வள்ளுவர்,

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (குறள் - 666)

என்ற குறள்வழி, உறுதிமிக்க செயல்பாடுகள் எண்ணியவற்றை முடிக்கும் தன்மையைத் தருமென்பது எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வகையில் சமுதாயம் பயனடைய வேண்டும், சமுதாயம் மாற்றம் பெற வேண்டும் என்ற உயர்ந்த கொள்கை உடைய இளைஞர்களைப் பற்றி மெழுகுவத்திகள், விழிப்பின் வழி ஆகிய நாடகங்கள் கூறுகின்றன. மெழுகுவத்திகள் நாடகத்தில் புற்றுநோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் மருத்துவ ஆய்வு மாணவர் ஜான்சனின் செயல் வழியாக எடுத்துரைக்கப்படுகிறது.

சாவதற்குள் மனிதகுல மேம்பாட்டுக்காக ஏதாவது ஒரு நன்மையைச் செய்துவிட வேண்டும். அதைச் செய்துவிட்டுத்தான் சாகவேண்டும். (மெழுகுவத்திகள், ப. 42)

என்று ஜான்சன் கூறுவதிலிருந்து இளைஞர்கள், சமுதாயம் பயனடைய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்ட கொள்கைப் பாதையில் பயணிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளதை அறிய முடிகிறது. கொள்கையை எட்டுவதற்குத் தடையாக இருக்கும் தாயன்பு, திருமணம் போன்ற சுயவிருப்புகளைக் கடந்து, தன் மறுப்புடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் இளைஞர்களால் சமுதாயத்திற்குப் பயனளிக்க முடியும் என்பதை,

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

உங்க வேதனை எனக்குப் புரிகிறது அம்மா. ஆனா இந்த வேதனைக்கு இப்பமே அடிமைப்பட்டேண்ணா வளர்ந்து வரும் சமுதாயத்தை முடக்குகிறேன் என்று அர்த்த (விழிப்பின் வழி, ப. 143)

என்று கூறுவதாக விஜயக்குமார் கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. தாய் தன் மகனிடம் ஊரார் பழிக்க எதையும் செய்யக்கூடாது என்று சீர்திருத்;தச் சிந்தனைக்குத் தடைவிதிக்கிறாள். அதையும் தாண்டி சமுதாயம் மாற்றம் பெற பாசம் தடையாக இருக்கக் கூடாது என்பதை விஜயக்குமார் என்ற இளைஞர் வழியாக நாடகத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

என்னுடைய கண்டுபிடிப்பை உலகுக்கு அறிவித்த பின்னால் தான் திருமணம் என்ற நினைவே எனக்கு வரும் (மெழுகுவத்திகள், ப. 21)

என்று ஜான்சன் என்பவர் கூறுவதிலிருந்து துடிப்பும் ஆர்வமும் நிறைந்த இளைஞர்களால் மட்டுமே கொள்கைப் பாதையில் தடைகளைக் கடந்து பயணிக்க முடியும். மேலும் கொள்கையாளருடைய பயணம் எளிதானது அல்ல. மாறாகத் துன்பம் நிறைந்தது என்பதை,

இலட்சியவாதிகளுடைய வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருப்பினும் தோல்வி நிறைந்ததாக இருக்காது. ஆனால் எதிரிகளின் கண்ணுக்குத் தோல்வியைச் சந்திப்பதாகத் தோன்றலாம். (விழிப்பின் விழி, ப. 112)

என்று வாழ்வு துன்பம் நிறைந்ததாக இருந்தாலும் அது வெற்றியே என்று இளைஞர்களை உற்சாகப்படுத்தும் விதமாக நாடகத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதனை,

போராடி போராடித்தான் வெற்றி என்ற சிகரத்தை அடைய வேண்டும். ஒருமுறை தடுமாறி விழுந்தால் நாம் எழுந்திருப்பதே இல்லையா? இலட்சியப் பயணத்தில் எதற்கும் தயாராக இருக்க வேண்டும். கசக்ஷடத்தைப் பற்றி தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டே இருக்கக்கூடாது. (மெழுவத்திகள், ப. 38)

என்று இளைஞர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வாழ்க்கைத் தத்துவங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கொள்கை நிறைந்த இளைஞர்களின் பங்கு சமுதாயத்திற்கு மிகவும் தேவையானதாகும் என்பதை விழிப்புணர்வு நாடகங்கள் வழி அறியமுடிகிறது.

எல்லை கடந்த நட்பு

சிறந்த நட்பு என்பது துன்பத்தில் உடனிருந்து, பகிர்ந்து கொள்ளுதல். அன்பான கரங்களால் காயங்களைத் தொட்டு மருந்திடுதல், குழப்பமான சூழலில் ஆர்ப்பாட்டம், விளம்பரம், எதிர்பார்ப்பு ஏதுமின்றி உடனிருத்தல். பலவீனங்களை அறிந்து பலன் தருதல். இது உண்மையான நட்பாகும். திருவள்ளுவரும் நட்பு என்னும் அதிகாரத்தில் சிறந்த நண்பருக்குரிய அடையாளத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (குறள் - 788)

ஆடை இழந்தவன் கை, உடனே விரைந்து அதைப் பிடிக்க ஓடுவது போல நண்பன் துன்பப்படும்போது உடனே சென்று அவர் துன்பத்தைப் போக்குவதே சிறந்த நட்பாகும். இப்புனிதமான உறவு இளைய தலைமுறையினரிடம் சாதி, சமயம், உறவு என்று குறுகிய வட்டத்திற்குள் முடங்கிவிடாமல் எல்லை கடந்து செல்லும்போது சமுதாய மாற்றத்திற்கு அடித்தளமாகிறது. இதனைத் தமிழ்க் கிறித்தவ விழிப்புணர்வு நாடகங்களில் மிகுதியாகக் காணமுடிகிறது.

ஒரு கல் கனியாகிறது நாடகத்தில் ஊர்ப்பண்ணையார் கருணைநாதன், தன் பங்களாவில் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் காலடிகூடப் படக்கூடாது என்று சாதியத்தை உடும்புப் பிடியாகப் பிடித்திருப்பவர். அவர் மகன் தேவா ஊர் மக்கள் அனைவருடனும் மனிதாபிமானத்தோடு பழகுபவன்.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

> **மனிதனின் முதன்மையான நற்குணம் மனிதநேயம். மானுடம் என்பது மனிதனிடம் மட்டும் அல்லாமல் பிற உயிரினங்களையும் அரவணைத்து பரிவோடு இணக்கமாகவும் நடந்து கொள்வதாகும். மானுட சரித்திரம் எத்தனையோ இன, மத ரீதியான மோதல்களை, போர்களை கண்டிருந்தாலும் பிற உயிர்களிடம் காட்டும் முதன்மையான அன்பே மனித நேயம் ஆகும். பிற உயிர்களையும் தன் உயிர் போல் எண்ணுதலே மேன்மையான மனிதப் பண்பாகும். (மா. சியாமிளா, ப. 117)**

என்பதை இந்நாடகத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மக்களுக்கு மருத்துவச் சேவை செய்துவரும் மருத்துவர் சேவியர் தாழ்ந்த சமூகத்தைச் சார்ந்தவர். இவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பண்ணையார், அவர் மருமகன், கணக்கர். எனவே மருத்துவர் சேவியரின் மருந்தகத்திற்குத் தீ வைத்து விடுகின்றனர். கருணைநாதனின் மகன் தன்னுடைய பெற்றோரின் செயலுக்காக வருந்தினான். மருத்துவரிடம் மன்னிப்புக் கேட்டதுடன் புதிதாக மருந்தகம் கட்டுவதற்குத் தந்தைக்குத் தெரியாமல் உதவியும் செய்தான்.

> **உங்க நல்ல மனசுக்காக சுயநலமற்ற சேவைக்காக இந்தச் சின்ன உதவியைச் செய்கிறேன். ஏத்துக்குங்க உங்க பணியைத் தொடங்குங்க. பக்கத்துணையா நானிருக்கிறேன். (ஒரு கல் கனியாகிறது, ப.72)**

என்று தனது உடனிருப்பையும், அன்பையும் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

கலப்புத் திருமணம்

தை பிறந்தால் வழிப் பிறக்கும் இது தமிழரின் நம்பிக்கை. பல இளைஞர், இளம்பெண்களுக்கு என்னதான் வழி பிறந்தாலும் பலர் இன்னும் திருமணக் கனவிலேயே இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். வீட்டில் முனைந்து பெண் தேடினாலும், எல்லாப் பொருத்தங்களும் அமைந்தாலும் சாதிப் பொருத்தம் அமைவதில்லை. திருமணம் தள்ளிப் போகிற, தவறிப் போகிற நிலை நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது. இதற்கு முக்கியக் காரணம் சாதிக்குள்ளாகத் திருமணம் செய்ய வேண்டும் என்ற அவல நிலை.

> **இன்றைய சமுதாயத்தில் அந்தந்த சாதி ஆண் பெண் இணைந்தே அந்தந்த சாதிக் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும். இதுதான் நியதி. இதில் தான் சாதியத்தின் நுழைவாயில் கட்டமைக்கப்படுகிறது. சாதி மாற்றி வேறுபட்டுச் செய்யப்படுகின்ற திருமணங்கள் மற்றும் காதல் திருமணங்கள் ஆகியவை முறை தவறியதாக, தவறானதாக எண்ணப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றன. இதனால் சாதியம் தலைமுறை தலைமுறையாகக் காக்கப்பட்டும், தொடரப்பட்டும் வருகிறது. இதனை ஒழிக்க வேண்டுமென்றால் அகமண முறையை அடியோடு ஒழிக்க வேண்டும். (சமூக நோக்கில் விவிலியம், ப. 82)**

இயேசு கிறித்து சாதியத்திற்கு உட்பட்டவரல்லர். ஆனால் அவரைப் பின்பற்றும் கிறித்தவர்களும் சமத்துவச் சிந்தனையும் செயல்பாடும் உடையவர்கள் என்று பெயரளவில் மட்டும் கூறப்பட்டு வருவதாகக் கூறலாம். கத்தோலிக்கர்கள், சீர்திருத்த பிரிவினர், பெந்தகோஸ்தே, தூய ஆவி திருச்சபை என்று எல்லா கிறித்தவ சபைகளும் சாதிக்குள் திருமணம் செய்துகொள்கின்றனர். இம்மணமுறையை நம் மனங்களிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் அகற்றப்படும்போது தான் சமுதாய மாற்றத்திற்கு வழி வகுக்கும் என்பது தமிழ்க் கிறித்தவ விழிப்புணர்வு நாடகங்களில் விளக்கப்பட்டுள்ளன.

விஜயக்குமார் சோபியின் கலப்புத் திருமணம் பற்றி விழிப்பின் வழி என்ற நாடகத்தில் கூறப்பட்டுள்ளது. இவர்களுடைய திருமணத்தைப் பற்றி ஊரார் அவதூறாகப் பேசுவார்கள் என்ற காரணத்திற்காகத் தாய் மகனிடம் கெஞ்சினாள். அந்நிலையில் மகன் விஜயக்குமார்,

> **அம்மா! நான் நினைத்தால் எத்தனையோ சோபிகள் கிடைப்பார்கள். ஆனால் சமுதாயம் மாற்றம் அடைய வேண்டும். அதற்கு இந்தத் திருமணம் ஒரு வழி. நானும் சோபியும்**

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

அதற்குக் கருவிகள். இந்தக் கருவிகளைப் பயன்படுத்துவது கடவுள் (விழிப்பின் வழி, ப.142)

என்று சமுதாய மாற்றத்திற்கு அடித்தளமிட்டார். இவ்வாறு சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு இளைஞரும் இளம்பெண்ணும் மாற்றத்தை ஏற்படுத்தும் போதுதான் சமுதாயம் மாற்றம் பெறும் என்ற சிந்தனை இந்நாடகம் வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

இலக்குத் தெளிவு

இலக்குகள் தெளிவாக இருந்தால் தான் வாழ்வின் பாதை தெளிவாக அமையும். எதை நோக்கிப் பயணிக்கிறோம் என்ற தெளிவில்லாத சூழலில் பாதை எவ்வாறு தெளிவாகும்? இலக்கு இல்லாமல் வாழ்ந்தால் மண்ணும் மரமும் போலாவோம். எனவே தான் வள்ளுவர்,

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (குறள் - 666)

என்ற குறளின் வழி எண்ணியபடியே செயலாற்றுவதில் உறுதியாக இருந்தால் எண்ணியவற்றை எண்ணியவாறு அடைவோம் என்கிறார். இறைமகன் இயேசுவும் இலக்குத் தெளிவுள்ள ஒரு சிறந்த கொள்கையாளராகத் திகழ்ந்தார். எவ்வாறெனில் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதே அவரது கொள்கையாக இருந்தது. இயேசு காணாமல் போனபோது மரியாவும், யோசேப்பும் தேடினார்கள். அவர் எருசலேம் தேவாலயத்தில் அறிஞர்களோடு மறைநூலைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். மரியா, மகனே! நானும் உன் தந்தையும் மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே? என்றார். உடனே சிறுவன் இயேசு, **"நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்றார்." (லூக். 2:49)** இவ்வாறு இளமை முதல், 'தன் கொள்கை என்ன?' என்பதில் இயேசு தெளிவாயிருந்தார். அதை அவ்வாறே நிறைவேற்றினார் என்பதை அவர் சிலுவையில் தொங்கிய கடைசி நிமிடத்தில் **"எல்லாம் நிறைவேறிற்று என்று கூறித் தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார்" (யோவான் 19:30)** என்பதிலிருந்து வாழ்க்கை முழுவதும் அவர் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டார் என்பதை விவிலியத்தின் வழி அறிய முடிகிறது. 'ஒளிநிறை புனிதை கிளாரா' நாடகம் முடங்கிக் கிடக்கும் பெண்குலத்தை விழிப்படையச் செய்யும் பொருட்டு படைக்கப்பட்டுள்ளது. இந்நாடகத்தின் தலைமை மாந்தரான கிளாரா உறுதியான கொள்கையுடைய பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளார்.

கனவு காணுங்கள் இளைஞர்களே, நீங்கள் உறங்கும் போது வருவது கனவல்ல. மாறாக, உங்களை உறங்க அனுமதிக்காததே கனவு என்கிறார் அப்துல் கலாம். (பழையது புதிதாக வளர்ச்சிக்கான வாழ்வியல் நெறிகள், ப.105)

என்ற கூற்றின்வழி அறியமுடிகிறது. இவர் காணச் சொல்லும் கனவு 'கொள்கைக் கனவு'. அதே போலப் புனித கிளாராவின் வாழ்க்கையில் கிறித்துவைப் பின்பற்றி ஏழ்மையாக வாழ வேண்டும் என்ற கொள்கை அவளைத் தூங்க அனுமதிக்கவில்லை. பிரபுக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால், அவளின் கொள்கையை எட்டுவதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. அவள் கொள்கையில் தடம் மாறவில்லை. கிளாரா, **"ஏழ்மை வாழ்வை நான் பெரிதும் விரும்புகிறேன். மேலும் கிறிஸ்துவின் ஏழ்மையை நான் முழுமையாகப் பின்பற்ற முயலுகிறேன்" (ஒளிநிறை புனிதை கிளாரா, ப.37)** என்று தெளிவோடு வாழ்வை நகர்த்தினாள்.

தெளிவான இலக்கும் விடாமுயற்சியும் கொண்டுள்ள ஒருவருக்குச் சாதனை என்பது ஒரு சிக்கல் அல்ல. கொள்கையாளர்களின் நெஞ்சம், நரம்பிழைகளால் அல்ல. நம்பிக்கை வலைகளால் பின்னப்பட்டிருக்க வேண்டும். கொள்கையில் உறுதியுள்ளவருக்கு ஒருபோதும் ஏமாற்றமே இல்லை. இதனை, கிளாரா தன் வாழ்வில் சாத்தியமாக்கினாள். தான் எண்ணியபடியே துறவற மடத்தில் சேர்ந்து ஏழ்மை வாக்குறுதியை ஏற்று வாழத்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

தொடங்கினாள். அப்போது அவளது தந்தை அதனைத் தடுக்க, அவள் இருந்த மடத்திற்குச் சென்றுக் கோபத்தோடு அழைத்தார்.

> **நாங்களோ உனக்குத் திருமண ஏற்பாடு செய்கிறோம். நீயோ இங்கு வந்து, கன்னியர் மடத்தில் ஒளிந்துகொண்டு இருக்கிறாய். இம்மடத்தை விட்டு உடனடியாக வெளியே வந்துவிடு. இல்லையென்றால் நடப்பதே வேறு விதமாயிருக்கும். (ஒளிநிறை புனிதை கிளாரா, ப.83)**

என்று தந்தை கூறினாலும் அதை ஒரு பொருட்டாக ஏற்கவில்லை. துணிவோடு தன் வாழ்க்கையின் கொள்கை இதுதான் என்று கூறி மறுத்து விடுகிறாள். கிளாராவின் இலக்கு தெளிவாக இருந்ததால் அவளால் திடமுடன் பயணம் செய்ய முடிந்தது. எந்தவித நெருக்கடியிலும் அவளது இலக்கு கலைந்துவிடவில்லை. எனவே, தான் அக்காலச்சூழலுக்கு இயலாத மிகவும் ஏழ்மை நிறைந்த அவளது வாழ்வைப் பார்த்த மறைஆயர் அவளது ஏழ்மையைக் கைவிட்டுவிடும்படிக் கேட்டுக்கொண்டார். அவள், **"பரிசுத்த பாப்புவே! ஏழைக் கிறித்துவை முழுமையாகப் பின்பற்றும் கடமையிலிருந்து விடுபட நான் ஒருபோதும் சம்மதியேன்" (ஒளிநிறை புனிதை கிளாரா, ப.132)** என்று துணிவோடு மறுத்து விட்டாள். வாழ்வு முழுவதும் கொள்கையோடு வாழ்ந்து இலக்கை அடைந்த கிளாரா பெண்குலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவரைப்போன்று சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் கொள்கையோடு செயல்பட்டால் அடிமை என்பது அகன்றுவிடும். பெண் விடுதலை அடைய வேண்டும் என்றால், அதற்கு இலக்குத் தெளிவு வேண்டும் என்பதைத் தனித்தன்மையாகக் கொண்டு இந்நாடகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாற்றத்திற்கான ஆணிவேர் இளையோர்

தனக்கு என்பதை விட்டுக்கொடுத்து பிறரின் மகிழ்வில் நிறைவு காண்பது மாற்றத்திற்கான அடிப்படையாகு. 'கரை தட்டிய படகு' நாடகத்தில் அந்தோணி-வள்ளி, தாமஸ்-ரோஸி இரு குடும்பமும் தியாகத்தினால் கட்டப்பட்ட குடும்பங்களாகும். அநாதைப் பெண்ணான வள்ளியை பிச்சையா என்ற பணம் படைத்த முதியவர் ஆசை நாயகியாக வைத்துக் கொள்ள நினைத்தார். ஆனால் வாழ்ந்தால் மானத்தோடு வாழ வேண்டும் என்ற உயர்ந்த உள்ளம் கொண்டவள் வள்ளி. பிச்சையாவின் வற்புறுத்தலைத் தாங்க முடியாமல் கடலில் விழுந்து தற்கொலை செய்யச் சென்றாள். ஆனால் அவளது நிலையை அறிந்து எந்தவொரு எதிர்பார்ப்புமின்றி அவளைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டார் அந்தோணி.

> **தாய் தகப்பனைக் கண்ணால் கூடப் பார்க்காத இந்த அநாதைப் புள்ளைய உங்க பிள்ளையா நினைங்க! கடலிலே விழுந்து சாகப்போன என்னைக் காப்பாத்தின புண்ணியவானை ஒண்ணும் சொல்லாதீங்க! (கரை தட்டிய படகு, ப. 110)**

என்று வள்ளியின் வழியாக அந்தோணியின் தியாக உள்ளம் எடுத்தியம்பப்பட்டுள்ளது. வள்ளியும் அந்தோணியும் இணைந்து நல்வாழ்வு வாழ்ந்ததோடு தம் பெற்றோர், உடன் பிறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையிலிருந்தும் அந்தோணி தவறவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது.

> **யாருமற்ற சீனு என்ற சிறுவன் சித்தியின் கொடுமையால் சுயமாக வேலை செய்து வயிற்றை நிரப்பி வந்தான். வேலை கிடைக்காதபோது வயிறும் காலி என்றிருந்த அவனுக்கு, தன்னுடைய சிறு வருமானத்தில் தங்களுக்கு உணவு இல்லாவிட்டாலும் அச்சிறுவனுக்கு உணவு கொடுத்து மகிழ்ந்தனர் அந்தோணி – வள்ளி குடும்பத்தினர். இப்படிக் கூலி கிடைக்காத நாளிலே பட்டினி கிடக்காதடா? அக்காட்ட வந்து கேட்டு வாங்கிச் சாப்பிடு... ((கரை தட்டிய படகு, ப. 107)**

என்று அச்சிறுவனின் மகிழ்விலும் பசி தீர்ப்பதிலும் மகிழ்ந்தனர் என்பதை இதன்வழி அறியலாம்.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

லூர்துசாமியின் குடும்பத்தினர், மீனவர்களின் வழக்கப்படி தம் குடும்பத்தில் உள்ள ஆண்கள் எல்லாம் இணைந்து படகில்; மீன்பிடிக்கச் சென்றனர். எதிர்பாராதவிதமாகப் படகு சுழியில் சிக்கி அனைவரும் இறந்து விட்டனர். அந்தக் குடும்பமோ ஆதரவும், வருமானம் ஈட்டவும் ஆளில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டது. இக்குடும்பத்தின் நிலையறிந்த அந்தோணியின் நண்பன் தாமஸ் அக்குடும்பத்திற்கு உதவ வேண்டுமென்று தீர்மானித்தான். அவனுடைய தாய்ப் பார்த்திருந்த வரதட்சணையுடைய பெண்ணை மணக்காமல் அக்குடும்பப் பெண்ணான ரோஸியை மணக்கத் தீர்மானித்தான்.

> **நம் வள்ளக்காரரு தங்கச்சிய முடிக்கத்தான் பிரியம். சம்பாதிக்க மூணு ஆம்பிளைகளை இழந்த அந்தக் குடும்பத்திற்குச் செலவு இல்லாமல் முடிக்கப் போறேன். (கரை தட்டிய படகு, ப. 149)**

என்பதிலிருந்து தாமஸின் தியாகம் நிறைந்த உள்ளம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு திருமணத்தின் வழி வரதட்சணையைப் பெற்றுச் சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் பகட்டாக வாழ வேண்டும் என்று எண்ணுவது இன்றைய மெய்ம்மையான சமுதாயச் சூழல். தங்களுடைய தியாகத்தினால் அழகுசெய்து மகிழ்ந்த இரு இளைஞர்களை இந்நாடகத்தில் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றத்தை செயலில் காட்டும் இளைஞர்களால் தான் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இந்நாடகம் தெளிவாக விளக்குகின்றது.

நாடகங்களும் நலன்பயப்பவைகளும்

நாடகங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான சிறந்த சாதனமாகும். சமுதாய மாற்றத்திற்கான கருவி இளையோர் என்பதால் அவர்களின் நிலையைப்பற்றி கூறுவதில்,

> **தான் வாழும் சமுதாயத்திற்குத் தரவேண்டிய, மிக இன்றியமையாச் செய்திகளைச் சொல்ல வேண்டியது கலைஞனின் கடமையாகும். அவை நகைச்சுவை உணர்வுடன் மக்கள் சமுதாயத்தில் அறநெறிக் கோட்பாட்டிற்குக் கட்டுப்பட்டு நல்வாழ்வு நடத்துவதற்கு நீதியைப் புகட்டுவதாக இருக்க வேண்டும். (நாடகக் கலையின் வரலாறு, ப. 44)**

என்று படைப்பாளனின் கடமைகளைப் பற்றி நாடகக்கலை வரலாறு என்ற நூலில் விளக்கியுள்ளனார். தமிழ் நாடகப் படைப்பாளர்கள் மக்கள் அறநெறிச் சிந்தனையிலிருந்து திசைமாறிச் செல்வதை உணர்ந்துள்ளனர்; மனித வாழ்வு திசை திரும்புவதற்கான காரணங்களைத் தெரிந்து கொணடு அவற்றைத் தம் படைப்புகளின் வழியாக வெளிப்படுத்தி மக்கள் மனதில் விழிப்புணர்வுச் சிந்தனையை விதைத்துள்ளனர். நாடகம் என்பது வெறும் பொழுதுபோக்கல்ல. மொழிப் பற்றுக்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் இன்றியமையாத சிறந்த சாதனமாகும். இவற்றை,

> **உயர்ந்த படிப்பினைகளைக் கொண்ட நாடகங்கள் ஒரு சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்யும், நாகரீகத்தை வளர்க்கும். ஐம்புலன்களின் வாயிலாக அறிவைத் தரும். அன்றாட வாழ்விலுள்ள தீய இயல்புகளின் கொடுமைகளையும் நல்லியல்புகளின் நலன்களையும் படம்பிடித்துக் காட்டும். (வளரும் தமிழ், ப. 205)**

என்று சோமலெ விளக்கியுள்ளார். நாடகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, நாடகத்தின் கருத்தை மக்கள் சிந்தித்துப் பேசிக் கொண்டு போவர். அதுவே சிறந்த நாடகமாக அமைகின்றது. இத்தகைய உயர்ந்த சிந்தனைகளைத் தமிழ நாடகங்கள் மக்களுக்கு வழங்கியுள்ளன.

இளைஞர்கள் தவிக்க வேண்டியவை

இளையோர் நாட்டின் எதிர்காலத் தூண்கள் என்றாலும் தவிக்கவேண்டிய செயல்பாடுகளைப் பற்றியும் நாடகங்களில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகத்தில் நல்லூர் குருசு அந்தோணிமுத்து அவர்கள் இளைஞர்கள் தவிக்கவேண்டிய செயல்பாடுகளைப் பற்றித் நாடகத்தில் சிறப்பாக

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

விளக்கியுள்ளார். மதுரராயர் மதுரேந்திர அரசனின் தம்பி சந்திரபாலன், அந்தியோக்கிய நாட்டரசன் சந்தியாகுவின் தம்பி திரைக்கோன் இருவரும் கனுகொந்தாள் மீது மையல் கொண்டனர். புனித கனுகொந்தாள் அரசனின் மனைவி. நாட்டு மக்களின் நலனுக்காகக் கணவன் காட்டிற்குச் சென்றார். அந்நாட்களில் கணவனின் தம்பி கனுக்கொந்தாள ஆசைக்கு இணங்கும்படி அழைத்தான். மறுத்ததால், உண்மையை அண்ணன் வந்தவுடன் தெரிவித்து விடுவாளோ என்று அஞ்சினான். சூழ்ச்சியாக அண்ணன் இல்லாத நேரத்தில் மோகத்தினால் தன்னிடம் இன்பம் அனுபவிக்க வற்புருத்தினாள்; என்று பழியை கனுகொந்தாள் மீது சுமத்தி விடுகிறான். சற்றும் ஆராயாத கனுகொந்தாளின் அன்புக் கணவன்,

காலமென்றாய் தம்பி சந்திரபாலன் கரம்பிடித்த
நீலியே இன்னம் உனக்கு சோலியா - கொண்ட
மாதரைக் குலைமடிப்பேன் கூவினான்
தற்பரனார் கற்பனையை அற்பமும் நினைந்திடாமல்
சங்கை கெட்ட பாதகி பேசாதே நீ உந்தன்
பங்கமொழி என்செவிக் கேளாது. (புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம், ப. 82)

என்று தம்பி சொன்னவற்றை நம்பினான். அன்பு மனைவியுடன் வாழ்ந்த காலத்தில் அவளின் குணநலன்களைத் தெரிந்து கொள்ளாமல் அவளை இழிவுபடுத்திப் பேசினான். அவள் கூறவந்தவற்றையும் கேட்காமல் தீர்ப்பளித்தான். கனுகொந்தாள் பழியை ஏற்றுக்கொண்டாள். பிறர் மனை நோக்காதே, விபச்சாரம் செய்யாதே என்ற கடவுளின் கட்டளையைக் கடைபிடித்து கிறித்தவ வாழ்வு வாழ்ந்ததால் கிடைத்த பரிசு என்று மனதால் வேதனையுற்றாள். கடவுளுக்கு ஏற்ற வாழ்வு வாழ்ந்த நிறைவில் கொலை தண்டனையை ஏற்றுக்கொண்டாள். இவ்வாறு கனுகொந்தாள் கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றி வாழ்ந்ததும் அவளுக்கு குடும்ப உறவுகளால் துன்பம் ஏற்பட்டதையும் இளைஞர்கள் பிறர்மனை நோக்கல் தவறு என்பது புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஊதாரியை நல்வழிப்படுத்தும் சாஸ்திரியார்

மக்களை நல்வழிப்படுத்தவேண்டும் என்ற பொதுமையான நோக்கத்தில் 'ஊதாரிப்பிள்ளை விலாசம்' என்ற நாடகம் படைக்கப்பட்டுள்ளது. சொத்தில் பங்கு கேட்கும் ஊதாரியான இளைய மகனுக்கு நல்லறிவு புகட்டிப் பார்க்கிறார் தந்தை. அவன் மறுக்கும் வேளையில் மேலும் முயற்சி செய்கிறார். சாஸ்திரியை அழைத்தால் நல்லறிவு புகட்டுவார் என்ற நம்பிக்கையில் மூத்தமகன் சாஸ்திரியை அழைத்து வருகிறார். அப்போது ஊதாரிப்பிள்ளை விலாச நாடகத்தின் மூலநூலாகிய லூக்கா என்பவரின் நற்செய்தி நூலின் 15ஆம் அதிகாரத்தில் கூறப்பட்ட ஊதாரியின் உவமையை சாஸ்திரியார் இளைய மகனுக்குப் போதிக்கிறார்.

கேட்பாயாக எனது பிரிய உதார குணோத்தமராகிய திரவிய சம்பன்னருக்கு இரண்டாவதா யுற்பவித்த இளைய குமாரனே! நீர் தந்தையுயிரோடிக்கையிற்றானே துர்ச்சாவகாச தோக்ஷத்தால் தமையனைத் தூறு பேசி உனதாஸ்திகளைப் பங்கீட்டுப் போவதை யோசிக்குமிடத்து நம்முடைய கிறிஸ்தேசு நாதரின் சீக்ஷர்களி லொருவராகிய அர்ச் லூக்கா என்பவர் எழுதி வைத்த சுவிசேக்ஷம் 15ஆம் அதிகாரத்தில் ஓர் உவமையைச் சொல்கிறார். (ஊதாரிப்பிள்ளை விலாசம், ப. 145)

சாஸ்திரிகளின் வருகை இளைய மகனை நல்வழிப்படுத்துவதாகவும், விவிலியத்தை விளக்கும் வாயிலாகவும் அமைந்துள்ளமை இதன்வழி தெளிவாகிறது.

மது அருந்தி பொருட்பெண்டிரைச் சேர்தல்

தந்தையின் சொல் கேளாமல், தீய நண்பர்களின் தூண்டுதலால் சொத்தில் பங்கு பிரித்துச் சென்றான் இளையமகன். தூரதேசம் சென்ற மகன் இன்னும் வரவில்லை என்று தந்தை புலம்புகின்றார். மகனோ தீய நண்பர்களுடன் இன்புற்று வாழ்கிறான். இவ்வாறு

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

கட்டுப்பாடு இல்லாத இளைஞன் தன் வாழ்வில் என்னென்ன தவறுகளுக்கெல்லாம் ஆளாகக்கூடும் என்பது ஊதாரிப்பிள்ளை நாடகத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அறிவை மயக்குங்கள் சாராய் தனயருந்திஎங்குழன்றும் பேறாய்
சிறக்கும் விலைமாதரைச் சேர்ந்துடலங் கொடுத்து
திரிந்தலைந்திடச் சென்ற சேயன் மனந்திரும்பி
இன்னமும் வரக் காண்கிலேனே. (ஊதாரிப்பிள்ளை விலாசம், ப. 198)

என்னும் ஊதாரிப்பிள்ளை நாடக அடிகள் மது அருந்துவதும், பொருட்பெண்டிருடன் சேர்வதும் தவறு; நல்வழிகாட்டுதல் இல்லாத நிலையில் இளைஞர்கள் தீய நண்பர்களுடன் இணைந்து இத்தவறுகள் செய்வது எளிது. இதனை இளைஞர்கள் தவிர்த்திட வேண்டுமென்று அறிவுரை கூறும் விதமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொகுப்புரை

இளைஞர்கள் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஆற்றல் மிக்க சக்திகள் என்பதைத் தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. விழிப்பின் வழி, ஒரு கல் கனியாகிறது, மெழுகுவத்திகள் கரைதட்டிய படகு, புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம் போன்ற நாடகங்கள் இளைஞர்களின் துடிப்பு, துணிவு, சுயசிந்தனை, சமூக அக்கறை, மனிதநேயம் மற்றும் மாற்றத்தை உருவாக்கும் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. இளைஞர்களின் ஆற்றல் சரியான வழியில் பயன்படுத்தப்படும்போது, சாதி, மதம், ஏற்றத்தாழ்வு போன்ற சமூகத் தடைகளைத் தாண்டி சமத்துவமும் சகோதரத்துவமும் நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும். எனவே, இளைஞர்களின் கனவுகளுக்கும் சிந்தனைகளுக்கும் உரிய வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக வழிநடத்துவது ஒவ்வொருவரின் கடமையாகும். என்பதை எடுத்துரைத்துள்ளதோடு இளைஞர்களிடம் தவிர்க்கப்பட வேண்டியவைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இன்றைய இளைஞர்களே நாளைய சமூகத்தின் சிற்பிகள்; அவர்களின் விழிப்புணர்வும் செயலாற்றலும் வலிமையான, சமத்துவமான, மனிதநேயமிக்க புதிய சமுதாயத்தை உருவாக்கும்.

குறிப்புகள்

[1] ஆசீர்வாதம் அடிகளார், வ. *விழிப்பின் வழி*. புனித பரலோக மாதா கோவில், 1986.
[2] இரணியல் கலைத்தோழன். *ஒரு கல் கனியாகிறது*. அசிசி அச்சகம், 1996.
[3] ஜான் பாப்டிஸ்ட், ஏ. *சமூக நோக்கில் விவிலியம்*. வைகறை பதிப்பகம், 2010.
[4] ஜெயசங்கர், இரா. "வள்ளலார் பார்வையில் மனிதநேயம்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 5, இதழ் 2, ஜன. 2023, ப. 117. DOI: 10.5281/zenodo.7591477.
[5] கருப்பசாமி, கோ. கா. *நமச்சிவாயரின் நாடகங்கள் ஓர் ஆய்வு*. தி.க. பதிப்பகம், 1990.
[6] பரிமேலழகர். *திருக்குறள்: பரிமேலழகர் உரை*. மணிவாசகர் பதிப்பகம், 2017.
[7] பூதலூர் முத்து. *மெழுகுவத்திகள்*. அன்னை தெரசா பதிப்பகம், 2001.
[8] சியாமிளா, மா. "ஊடகங்களில் தமிழ்ப் பண்பாடு." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, ISSN 2581-7140, தொகுதி 2, இதழ் 1, ஜூலை 2019, ப. 104.
[9] சோமலெ. *தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்*. நேசனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1981.
[10] சோசப் பெஸ்கி, ஏ., பதிப்பாசிரியர். *நல்லூர் குருசு அந்தோணிமுத்து இயற்றிய புனித கனுகொந்தம்மாள் கீர்த்தனை நாடகம்*. கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), 2012.
[11] ஹெலன் ஞானப்பிரகாசம். *கரை தட்டிய படகு*. உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், 1988.
[12] முத்துச்சண்முகம், பெரிய கருப்பன் இராம, பதிப்பாசிரியர். *நாடகக்கலையின் வரலாறு*. மதுரைப் பல்கலைக்கழகம், 1975.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

[13] மணிவளன், சி., பதிப்பாசிரியர். *ஊதாரிப்பிள்ளை விலாசம்*. கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி), 1993.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

Art of Drawing in Tamil Literature

Mr. L. A. Mohamed Ali Jinnah, Assistant Professor of Tamil, Jamal Mohamed College, Trichirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-9847-640X

Abstract

Even before learning to speak, early humans learned to express their thoughts through imagery. Painting is an art form used to faithfully depict both the inner world of the mind and the outer world. This noble art form has flourished throughout the ages. Painting involves perceiving a scene with the eyes, internalizing it, and rendering it exactly as it appears. Sangam literature serves as a treasure and illuminates Tamil culture and heritage. The creative genius of Sangam poets is truly awe-inspiring to the world. The poems composed by these poets offer insights into various art forms, one of which is the art of painting. Sangam texts themselves bear witness to the fact that this art form was already well-developed two millennia ago. The objective of this article is to examine the references to the art of painting found in ancient Tamil literature.

Keywords: Sangam Literature, *Ettuthogai*, *Pathupattu*, Oviyam, Sithiram.

References

[1] Ramasubramaniyan, Va. Tha. *Manimekalai Mulamum Uraiyum*. Poombukar Pathippagam, Chennai.
[2] Ramasubramaniyan, Va.Tha. *Silappathikaram Mulamum Uraiyum*. Puliyur Kesigan, editor, Saratha Pathippagam, Chennai, 2011.
[3] Kalavathi, Ka., Munaivar. "Agananoorril Tholkappiya Vannam." *Shanlax International Journal of Tamil Studies*, p. 20, ISSN: 2454-3993.
[4] Saminathaiyar, U.Ve. *Kurunthogai*. Kabir Achchukkoodam, Chennai, 1937.
[5] Thandayutham, Ira. *Sanga Ilakkiyam*. Thamizh Puthakalayam, Chennai, 1978.
[6] Thangavelu, Ko. *Indhiya Kala Varalaru*. Thamizhnattu Padanool Niruvanam, 1976.
[7] Thangavelu, So. *Indhiya Kala Varalaru*. 2nd book, Thamizhnattu Padanool Niruvanam, 1976.
[8] Thamizhannal. *Sanga Ilakkiyam*. Kovilur Madalayam, Kovilur, 2003.
[9] Thamizhannal. *Tholkappiyam Thelivurai*. Meenatchi Puthaka Nilaiyam, Madurai, 2017.
[10] Thulasi. Ramasami, Dr. *Thamizhaga Kalai Selvangal*. Ulaga Thamilaraichi Nilaiyam, Chennai, 1990.
[11] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Maduraikkanji*. New Century Book House, Chennai, 2004.
[12] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Narrinai*. New Century Book House, Chennai, 2004.
[13] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Kurunthogai*. New Century Book House, Chennai, 2004.
[14] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Kalithogai*. New Century Book House, Chennai, 2004.
[15] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Purananooru*. New Century Book House, Chennai, 2004.
[16] Parimanam, A.Ma., and Ku.Ve. Balasubramaniyan. *Sirupanarruppadai*. New Century Book House, Chennai, 2004.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

[17] Puliyur Kesigan, editor. *Silappathikaram Mulamum Uraiyum*. Saratha Pathippagam, Chennai, 2011.
[18] Puliyur Kesigan, editor. *Sanga Ilakkiyam Mulamum Uraiyum*. Saratha Pathippagam, Chennai.
[19] Manickavasagan, Gna. *Paththuppattu Mulamum Vilakkamum*. Uma Pathippagam, Chennai, 2016.
[20] Rasu Paunthurai, Dr. *Thamizhaga Oviyakalai Marapum Panpadum*. Meiyappan Pathippagam, Chidambaram, 2004.
[21] Stuart Sibi. "Sanga Kala Kattidangalil Oviyangalin Pangu." *Pranav Nunithazh*, ISSN 2582-9513.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

தமிழ் இலக்கியங்களில் ஓவியக்கலை

திரு. ல.அ. முஹம்மது அலி ஜின்னாஹ், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9847-640X

ஆய்வுச் சுருக்கம்

ஆதிமனிதன் பேசக் கற்கும் முன்னரே தம் எண்ணங்களைக் காட்சிகளாக வெளிப்படுத்தக் கற்றுக் கொண்டான். ஓவியம் என்பது உள்ளத்தில் உள்ளதையும், வெளியில் உள்ளதையும் அப்படியே வெளிப்படுத்தப் பயன்படும் ஒரு கலையாகும். இத்தகைய உன்னதமான கலையானது காலங்காலமாக வெளிப்பட்டுக் கொண்டே வருகிறது. ஓவியம் என்பது கண்களால் காணும் காட்சியை, உணர்ந்து அதை அப்படியே வடிப்பதாகும். சங்க இலக்கியங்கள் தமிழர் பண்பாட்டை விளக்கும் பெட்டகமாகும். சங்கப் புலவர்களின் படைப்புத் திறன்கள் உலகம் வியக்கும் வண்ணம் உள்ளது. அத்தகைய புலவர்கள் பாடிய சங்க இலக்கியப் பாடல்கள், பல கலைகள் பற்றிய செய்திகளை நமக்குத் தருகின்றன. அதில் ஒன்று ஓவியக்கலையாகும். இக்கலையானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வளர்ச்சியடைந்திருந்தது என்பதற்கு சங்க நூல்களே சான்று. ஓவியக்கலை பற்றிப் பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும் செய்திகளை எடுத்தாராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிப்புச்சொற்கள்: சங்க இலக்கியம், *எட்டுத்தொகை, பத்துப்பாட்டு,* ஓவியம், சித்திரம்.

முன்னுரை

தமிழ்ச் சமுதாயம் பழம்பெரும் பண்பாட்டைக் கொண்டது. தமிழர்கள் சங்க காலம் தொட்டே கலைகள் பலவற்றில் தேர்ச்சி பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். அது தொன்று தொட்டு நவீன யுகத்திலும் தொடர்கிறது. இன்றைய காலகட்டத்தில் கலை நிகழ்ச்சி இல்லாத விழாக்கள் இல்லை எண்ணுமளவுக்கு ஆகிவிட்டது. கலை என்பது அந்த அளவுக்குத் தமிழரின் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்டது. அத்தகைய கலைகளில் ஒன்றான ஓவியக் கலையை, சங்க இலக்கியங்கள் கையாண்டுள்ளமையைப் பற்றியும், அவற்றில் ஓவியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் குறித்தும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலை

கலை என்ற சொல்லை ஆங்கிலத்தில் ஆர்ட் (ART) என்று குறிப்பிடுவர். கலை என்றால் கற்றுக் கொள்வது என்றும் பொருள் கொள்ளலாம். ஏனென்றால் கல்வி என்ற சொல்லும், கலை என்ற சொல்லும் ஒரே பொருளை உணர்த்துவதாக இருக்கிறது. இரு சொற்களும் "கல்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்திருக்கின்றன. கற்றல் என்பது இரு சொல்லுக்கும் பொதுவான பொருளாக அமைகிறது.

எண்ணென் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியல் மடந்தயர் (சிலப்பதிகாரம், பா. 22: 138-139)

என்று சிலம்பில் கலைகள் அறுபத்து நான்கு என்ற குறிப்பும் இடம்பெறுகின்றது. சிலம்பை அடுத்து வந்த மணிமேகலையில் எதுவெல்லாம் கலைகள் என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. கூத்து, பாட்டு, தாள ஒழுங்கு (தூக்கு), தாரைக் கட்டு (துணிவு), யாழிசை நயம், அகப்புற நாடகப் பாடல்கள், மத்தளம், வாத்தியம், இனிய குழலிசை, பந்தாடல், சமையல், அழகு தரும் நறுமணப் பொடி தேய்த்து நீராடல், பாயிலிட்ட பள்ளியரை சோடிப்பு, பருவ காலத்திற்கேற்ற ஒழுக்கம், உடல் இன்பத்துக்குரிய காரணச் செயல், கருத்துணர்ந்து நயமாக நடத்தல், சொல்லுக்குத் திறமை, சுரந்துறை கணக்கு, எழுத்தாளுமை, மலர்களை ஆய்ந்து தொகுத்தல், காலத்திற்கும்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

நடிப்பிற்கும் ஏற்ற கோலங் கொளல், ஒப்பனை, முத்துக் கோர்த்தல், காலக் கணிதம் (சோதிடம்), ஓவியம் ஆகியவை ஆகும். இவற்றையெல் லாம் கற்றுணர்ந்தவளாக மணிமேகலையில் மாதவி பேசப்படுகிறாள். **"நாகரீகம், பண்பாடு என்பவை கலைகளின் வாயிலாகப் பிறந்தன. மிகத் தொன்மையான காலத்தில் தமிழகத்தில் ஒன்றிரண்டு கலைகள் குறைவாகக் காணப்பட்டன. அதன் பிறகு அவை அறுபத்து நான்கு கலைகள் என்றாயின. மக்கள் அறிவு வளர வளரக் கலைகளில் உட்பிரிவுகள் அரும்பியதோடு, புதிய கலைகளும் மலர்ந்து இன்று நாட்டில் ஆயிரக்கணக்கான கலைகள் மலர்ந்துள்ளன" (அ.இராகவன், நம் நாட்டுக் கப்பற்கலை, ப. 44)** என்று அ. இராகவன் குறிப்பிடுவதிலிருந்து கலைகள் நம் தமிழர்களின் வாழ்வில் பெற்றுள்ள இடம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. பயிற்சியே கலைச்சிறப்பாக வெளிப்படும் என்கிற கருத்தைத் தொல்காப்பியம்,

கண்ணினும் செவியினும் தின்னிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (தொல். பொ. மெய்.27)

ஓவியக்கலை

ஓவியம் என்ற சொல் 'ஒவ்வு' என்ற வினைச் சொல்லிலிருந்து பிறந்ததாகும்.'ஒவ்வு' என்பது ஒன்றைப் பற்று அல்லது ஒன்றைப் போலவே இருப்பதாகும். நாம் காணுகின்ற காட்சியை அப்படியே எழுதுவது 'காட்சி ஓவியம்' என்பர். தம் மனதில் ஒரு காட்சியைக் கற்பனை செய்து பின்னர் அதனை எழுதிக் காட்டுவது 'கற்பனை ஓவியம் ஆகும். மனிதன் தன் ஆரம்பக்காலத்தில் தான் கண்ட காட்சிகளைக் குகைகளில் ஓவியமாகத் தீட்ட ஆரம்பித்தான். வேட்டையாடும் காட்சிகளையும், பிற விலங்குகளின் உருவங்களையும், தன்னுடன் வாழ்ந்த மனித உருவங்களையும் வரைய ஆரம்பித்தான். **"தமிழ்நாட்டில் சமயம், நாட்டு இயற்கை, உணர்ச்சி,சூழல், காலம், மக்களின் பழக்கவழக்கங்கள், சுவைக்கும் பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஓவியக்கலை வளர்ந்துள்ளதைக் காணலாம்" (தமிழகக் கலைச்செல்வங்கள்: ப. 103)** பொதுவாக, ஓவியங்களை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம்.

1. **சமயத் தொடர்புடையவை**
2. **ஓவியப் பேரிலக்கணம் கொண்டவை**
3. **அலங்காரச் சித்திரங்கள்**
4. **கருத்தை வெளிப்படுத்துபவை.**
5. **அழகை எதிரொளிப்பவை**

களங்கள்

பழங்காலத்தில் மனிதன் தான் வாழும் குகைகளின் சுவர்களில் ஓவியங்கள் வரைந்தான். அது தன்னுடைய செய்தியினைப் பிறருக்கு உணர்த்துவதற்காகவே பயன்பட்டது. ஓவியம் தீட்டக் கற்களையும், முட்களையும் பயன்படுத்தி வந்தான். வண்ணங்களாக இலையின் சாருக்களையும், செம்மண் ஆகியவற்றைப் பயன்படுத்தியும் வந்துள்ளான்.

வண்ணங்கள்

ஓவியம் என்றாலே வண்ணமயமானது. அதனை வரைவதற்குப் பல்வேறு வகையான வண்ணங்களை உருவாக்கி ஓவியம் தீட்டினான். ஓவியன் தீட்டுவதற்குப் பயன்படுத்துவது வண்ணமாகும். இது நிறம் என்றும் வண்ணம் என்றும் வழங்கப்பெறும்.

வண்ணம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலச் சொல் ரிதம் (Rhyme) எனப்படும். பொருளின்றியும், பொருளோடும் வரும் ஓசை நயத்தால் இன்பம் தரும். பாவின்கண் நிகழும் ஓசை விகற்பமாகிய சந்த வேறுபாடே (Different Kind of Rhythm) வண்ணம் எனப் பேராசிரியரும், எழுத்து வகையான அமையும், சந்தக்கூறுபாடே (Variety of Rhythm) வண்ணம் என நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர் என்கிறது தொல்காப்பிய வண்ணநூல். (முனைவர் க.கலாவதி, ப. 20)

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

எட்டுத்தொகையில் ஓவியக்கலை

ஓவியம் வரைதலைச் சித்திரச் செய்தி என்றும் வட்டிகைச் செய்தி எனவும் குறிப்பிடுவர். மேலும் ஓவியம் தீட்டுதல் என்ற சொல் எழுதுதல் என்ற பொருளில் வழங்கப்பட்டிருப்பதை,

எழுதணி கடவுள் போகலின் புல்லென்று
ஓழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணை (அகநானூறு 167: 15-16)
சிறுதோள் கோத்த செவ்வரிப் பறையின்
கண்ணகத் தெழுதிய குரீஇப் போல (நற்றிணை 58: 2-3)

ஆகிய பாடல் வரிகளில் அறிய முடிகிறது.

அவ்வாறு வரைப்படும் ஓவியங்களில் இயற்கை அமைப்பும், அழகும் நிறைந்திருந்தது என்பதை, **"ஓவத்தன்ன கோபச் செந்நிலம்" (அகநானூறு: 54:4, சிறுபாணாற்றுப்படை 80: 71)** என்ற அகநானூறு பாடல் வரிகள் பறைசாற்றுகின்றன. மேலும், மாடங்களிலும் வீடுகளின் சுவர்களிலும் ஓவியம் தீட்டும் பழக்கம் இருந்தமையை,

காழ்பு னைந்தியற்றிய வன்பமை நோன்
சுவர் பாவை. (அகநானூறு 368: 7-8)

எனும் அகநானூற்றுப் பாடலாலும்,

நெடுமண் இஞ்சி நிணகர் வரைப்பின்
ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள் பல எழுதி (பதிற்றுப்பத்து 68: 17)

எனும் பதிற்றுப்பத்துப் பாடல் வரியாலும் மாடங்களுடைய மனைகளின் சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டு இருந்தன என்பதை அறிய முடிகின்றது. பரிபாடலில்,

நின்குன்றத்து
எழுதொழில் அம்பலங்காமவேள் அம்பின்
தொழில் வீற்றிருந்த நகர் (பரிபாடல் 18: 27-29)

இதில் பல்வேறு ஓவியச் செய்திகள் காணப்படுகின்றன. மரச்சட்டங்களும், நீர் விளையாட்டிற்கும், ஓவியர் தமது புனைவுக்குரிய பின்புலத்தை அமைத்ததற்கும் அரக்கு நிறத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை **நெடுநெல் வாடை (80, 81), சிறுபாணாற்றுப்படை (254, 256), நற்றிணை (341)** எடுத்துரைக்கின்றன.

உடம்பின் மேல்பாகத்தில் சந்தனம், குங்குமம் முதலியவற்றைக் குழம்பாகவோ (சாயமாகவோ) தயாரித்து அதனைப் பூசிக் காண்டு பின்னர் அதன் மேல் இலை, பூ முதலிய சித்திரங்களை வரைவர். அத்தகைய வரைவுகளின் வெளிப்பாடே தொய்யில் மரபு என்பதை,

இரந்தோ ருளர்கொ றேழி திருந்திழைத்
தொய்யில் வனமுலை (நற்றிணை 225:6-7)

என நற்றிணை சுட்டுகின்றது.

தோளில் தொய்யில் கரும்பு வரைதலும் உண்டு (பரிபாடல்: 7: 55) என்பதைப் பரிபாடலும் கூறுகின்றது. பாதங்களுக்கும் செம்பஞ்சி வண்ண ஓவியம் தீட்டப்பட்டன. அதனை, **"அஞ்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்" அகநானூறு 389:7)**
என்ற அகநானூற்று வரி எடுத்துரைக்கின்றது.

வட்டிகை, துகிலிகை

வட்டிகை என்பது ஓவியம் வரைதற்குரிய வண்ணக் கலவைகளை வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் வட்டவடிவமான தட்டு ஆகும். இருப்பனும், ஓவியம் எனும் பெயரிலும் கையாளப்பட்டுள்ளது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பவர் அரச குலத்தில் தோன்றிய புலவராவார். இவர் ஒரு சிறந்த ஓவியராகவும் விளங்கினார். சித்திரம் எழுதும் துகிலிகையானது பாதரிப் பூவைப் போல இருக்கும் என்பதை

ஓவமாக்கள் ஒள்ளரக் கூட்டிய

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி (நற்றிணை: 118)

என வரும் நன்றிணைப் பாடலால் அறியமுடிகின்றது.

பத்துப்பாட்டில்

நுண்ணுதி வளர்த்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர் (மதுரைக்காஞ்சி: 517-518)

என்னும் மதுரைக்காஞ்சி வரிகளில் தாம் கண்டு இரசித்த அழகென்று மகிழ்ந்த ஒன்றை மனதில் நிறுத்தி அதனை ஓவியமாகப் படைக்கும் ஆற்றலுடையவன் கண்ணுள் வினைஞர் என்று அழைக்கப்பட்டது தெரியவருகின்றது.

ஓவத்தன்ன வினைபுனை நல்இல்
பாவையன்ன பலராய் மாண்கவின் (நெடுநல்வாடை: 110: 12)

என்ற நெடுநல்வாடையின் வரிகள் அகன்ற முற்றங்களையும், மாடங்களையும் கொண்ட இல்லங்களில் ஓவியங்கள் இருந்தமையைக் காட்டுகின்றது.

வேறுபட்ட தொழில்களையுடைய ஓவியம் வரையப்பட்ட வெள்ளை நிறமுடைய அரண்மனையில் தூசி படிந்தது என்பதை,

வேறுபட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும் (பட்டினப்பாலை: 49)

என்னும் பாடல் வரிகள் உணர்த்துகிறது.

பல வகைப்பட்ட அரிதாக உணர்ந்த தொழில்களையும் ஒப்புக்காட்டி அழகுபடப் படைக்கும் அறிவு ஆற்றலுடைய சித்திரக்காரர்கள் மதுரையில் வாழ்ந்து வந்தனர், என்பதை

எவ்வகைச் செய்தியு முவமங் காட்டித்
துண்ணிதி துணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞரும் பிறருங் கூடி (மதுரைக்காஞ்சி 516-518)

என மதுரைக் காஞ்சி கூறுகின்றது.

சித்திரம் போன்ற தோற்றப்பொலிவு சித்திரம் வரைவதற்குத் தயாரிக்கப்பட்ட சுதையூட்டப்பட்ட வண்ணச்சுவர் என்றும் பொருள் காணலாம். சுவர்களிடையே அமைந்த சுதைகளையும் அவற்றில் ஓவியமாக அமைந்தவையும்,

வெண்சுதை விளக்கத்து வித்தகர்
இயற்றிய கண்கவர் ஓவியம் (மணிமேகலை 3: 130-131)

எனும் மணிமேகலைத் தொடரால் அறியமுடிகின்றது.

கைவல் கம்மியன் கவின் பெறப்புனைந்த
செங்கேழ் வட்டஞ் சுருங்கிக் கொடுந்தறிச்
சிலம்பி வானூல் வலந்தன தூங்க (நெடுநல்வாடை 57-59)

எனக் கைவல் கம்மியன் புனைந்த அழகிய வடிவத்தையும்,

மனையகம் புகுந்து மணிமேகலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும் (மணிமேகலை 16:130-131)
புனையா ஓவியம் புறம்போந் தென்ன (மணிமேகலை)

என வருகின்ற மணிமேகலையின் தொடர்களாலும் புனையா ஓவியம் அமைந்த செய்தியினை அறிய முடிகின்றன. மேலும், **"சங்க காலத் தமிழர்களின் தங்களின் வீடுகளில் ஓவியங்கள் இடம்பெறுவதற்கு முக்கியத்துவம் கொத்தார்கள்"** என்று நன்னூல் குறிப்பிடுவதாக பொ. ஸ்டூபர்ட் சிபி சுட்டிக்காட்டுகிறார்.

சங்க காலம் தொட்டு இன்று வரை காணப்படும் நக ஒப்பனை மரபு தமிழர்களிடம் சங்க காலம் முதலே இடம் பெறுகின்றது என்பதை, **"கிளிவா யொப்பின் ஒளிவிடு வள்ளுகிர்" (பொருநராற்றுப்படை: 34)**என முடத்தாமக் கண்ணியார் தமது பொருநராற்றுப்படையில் குறிப்பிடுகின்றார்.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

துணி ஓவியங்கள்

ஆடையில் ஓவியம் தீட்டும் பழக்கமும், திரைச்சீலைகளில் ஓவியம் வரைந்த செய்தியினையும் சங்க இலக்கியங்கள் நிரம்பப் பேசுகின்றன. அக்கால மகளிர், **"கோபத்தன்ன தோயாப் பூந்துகில்" (திருமுருகாற்றுப்படை: 15)** எனவரும் திருமுருகாற்றுப்படையின் அடியின் வாயிலாக வரைவுகளுடைய துகிலை உடுத்தினர் என்பதை உணரமுடிகின்றது.

முடிவுரை

இவ்வாறாக நம் முன்னோர்கள் பல வகையான உபகரணப் பொருட்கள், இயற்கையில் தயாரித்த வண்ணங்களைக் கொண்டும் ஓவியங்களை நமக்கு உருவாக்கித் தந்தனர். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியர்கள் சித்தன்னவாசலில் வரைந்து வைத்த வண்ணமயமான ஓவியம் இன்றும் அழியாமல் நிலைத்து நிற்கின்றன. இதுவே தமிழர்களின் ஓவியக் கலைக்கு மிகச்சிறந்த சான்றாகும். கோவில்களிலும், அரண்மனைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் இன்றும் பழந்தமிழரின் வாழ்வினை எடுத்துக் காட்டும் விதமாக அமைந்துள்ளது. அத்தகைய ஓவியங்களை பாதுகாத்து நாம் அடுத்த தலைமுறைக்கு நம் முன்னோரின் சிறப்பினை எடுத்துக் காட்டுவது உன்னதமானதாகும்

குறிப்புகள்

[1] இராமசுப்பிரமணியம், வா.த. *மணிமேகலை மூலமும் உரையும்*. பூம்புகார் பதிப்பகம், சென்னை.
[2] இராமசுப்பிரமணியம், வா.த. *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. புலியூர்க் கேசிகன், உரையாசிரியர், சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
[3] கலாவதி, க., முனைவர். "அகநானூற்றில் தொல்காப்பிய வண்ணம்." *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழிதழ்*, ப. 20, ISSN: 2454-3993.
[4] சாமிநாதையர், உ.வே. *குறுந்தொகை*. கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1937.
[5] தண்டாயுதம், இரா. *சங்க இலக்கியம்*. தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.
[6] தங்கவேலு, கோ. *இந்தியக்கலை வரலாறு*. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976.
[7] தங்கவேலு, சோ. *இந்தியக்கலை வரலாறு*. இரண்டாம் புத்தகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976.
[8] தமிழண்ணல். *சங்க இலக்கியம்*. கோவிலூர் மடாலயம், கோவிலூர், 2003.
[9] தமிழண்ணல். *தொல்காப்பியம் தெளிவுரை*. மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2017.
[10] துளசி. இராமசாமி, டாக்டர். *தமிழகக் கலைச் செல்வங்கள்*. உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1990.
[11] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *மதுரைக்காஞ்சி*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[12] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *நற்றிணை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[13] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *குறுந்தொகை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[14] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *கலித்தொகை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[15] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *புறநானூறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[16] பரிமணம், அ.மா., & கு.வெ. பாலசுப்பிரமணியன். *சிறுபாணாற்றுப்படை*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
[17] புலியூர்க் கேசிகன், உரையாசிரியர். *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை, 2011.

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

[18] புலியூர்க் கேசிகன், உரையாசிரியர். *சங்க இலக்கியம் மூலமும் உரையும்*. சாரதா பதிப்பகம், சென்னை.
[19] மாணிக்க வாசகன், ஞா. *பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும்*. உமா பதிப்பகம், சென்னை, 2016.
[20] ராசு பவுன்துரை, டாக்டர். *தமிழக ஓவியக்கலை மரபும் பண்பாடும்*. மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004.
[21] ஸ்டுவர்ட் சிபி. "சங்க கால கட்டிடங்களில் ஓவியங்களின் பங்கு." *பிரணவ் நுன்னிதழ்*, ISSN 2582-9513.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

Principles of Living and the Nobility of Sacrifice in *Kambaramayanam*

Dr. A. Ranjani, Assistant Professor, Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/000-0007-4650-3710

Abstract

Literature is not a mere tool for entertainment. It is a sublime art form that guides social cohesion and the cultural elevation of people. In this regard, Kambaramayanam stands as a timeless epic of life and teach humanity the path of righteousness across eras. This paper analyses the sublime values of life and the magnificent spirit of sacrifice exhibited by the characters in Kambaramayanam. It juxtaposing them with the poetic and philosophical theories of Western scholars. The study explores the pure love of Rama and Sita, who embraced even those who wronged them with forgiveness, and Rama's noble act of seeking boons from Dasaratha to clear the names of Kakeyi and Bharata, thereby erasing all blame. Moreover, it highlights Kausalya's emotional melting point upon witnessing Bharata's moral righteousness and she proclaims, "Even if there were countless millions of Ramas, could they ever come close to your grace, my lord?". Thus, the paper illustrates the grandeur of Satrughna, who selflessly rejects the royal throne offered to him. Ultimately, this research reveals that humanity-currently divided by enmity, hatred, and vindictiveness due to various reasons-must unite by embracing the core values of sacrifice and brotherhood illuminated by Kamban.

Keywords: *Kambaramayanam*, Values, Life, Philosopher, Sacrifice, Brotherhood.

References

[1] Kamban, Kambaramayanam (Yuddha Kanda), (Various Editions).
[2] Ilampirai Manimaran, Kamban Kavithiran / Kaappiya Aaivuraigal (Kamban's Poetic Skill / Epic Research Essays).
[3] Coleridge, Samuel Taylor, Biographia Literaria, 1817. *(Ref: "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher")*
[4] Emerson, Ralph Waldo, Preface to Parnassus, 1874. *(Ref: "The great poets are judged by the frame of mind they induce")*
[5] Kamban, *Kambaramayanam (Complete Six Kandams) - Text and Commentary*, Commentary by Vai. Mu. Gopalakrishnamachariyar, Uma Pathippagam, Chennai.
[6] *Kambaramayanam - Yutha Kandam (Mahavidwan Commentary)*, Vardhamanan Pathippagam, Chennai.
[7] Thiruvalluvar, *Thirukkural - Text and Parimelazhagar Commentary*, Kazhaga Veliyeedu, Chennai.
[8] Jagannathan, Ki. Va., *Kamban Kalai (The Art of Kamban)*, Amuthanilayam, Chennai.
[9] Radhakrishnan, Sa., *Kambanil Paathira Padaippukkal (Characterization in Kamban)*, Pari Nilayam, Chennai.
[10] Pater, Walter, Appreciations: With an Essay on Style, 1889. *(Ref: "Given the conditions I have tried to explain as constituting good art, then if it be devoted further to the increase of mens happiness, to the redemption of the oppressed, or to the enlargement of our sympathies with each other...")*

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

